## பாரம்பரியமிக்க கவின் கலைகளைப் பயிற்றுவிக்க ரூ.4.79 கோடியில்

# மதுரையில் - புதிய அரசு கவின் கலைக் கல்லூரி அமைக்கப்படும்!

## சட்டப்பேரவையில் - கலை பண்பாடு மற்றும் அருங்காட்சியகங்கள் துறை மானியக் கோரிக்கை பதிலுரையில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அறிவிப்பு!

**சென்னை, ஜூலை 9 - "பாரம்பரியமிக்க கவின் கலைகளைப் பயிற்றுவிக்க ரூ.4.79 கோடி செலவில் மதுரையில் புதிய அரசு கவின் கலைக் கல்லூரி அமைக்கப்படும்" என்று சட்டப்பேரவையில் , கலை, பண்பாடு மற்றும் அருங்காட்சியகங்கள் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்து உரையாற்றுகையில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அறிவித்தார்.**

பேரவையில் அமைச்சர் மு.பெ. சாமிநாதன் பதிலுரை வருமாறு:-

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரையும், பேரறிஞர் அண்ணாவையும் வணங்கி, முத்தமிழறிஞர் கலைஞர் "என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே" என்கிற ஒற்றைச் சொல்லில் கழகத் தோழர்களை கட்டிப்போட்டதை இந்த நேரத்தில் நினைவு கூர்கிறேன். இயல், இசை, நாடகம் என முத்தமிழ் வித்தகரான தலைவர் கலைஞர் அவர்களை "முத்தமிழறிஞர்" என்று தமிழ் உலகம் மகிழ்ச்சியுடன் கூறி பெருமைப்பட்டாலும், ஓவியம், சிற்பக்கலையில் நுட்பங்களை அறிந்தவர் என்பதால் கலை பண்பாட்டு உலகம் அவரை "ஐந்தமிழ் அறிஞர்" எனவே கொண்டாடுகிறது.

2006 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை முத்தமிழறிஞர் ஐயா கலைஞர் அவர்கள், தமிழ்நாடு முதலமைச்சராக இருந்தபோதிலும், கலை பண்பாட்டுத் துறைக்குப் பொறுப்பேற்று, மானியக் கோரிக்கையை இம்மாமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்பதை இந்த நேரத்தில் நான் பெருமையோடு நினைவூட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

சமூகநீதியை வென்றெடுப்பவர், கல்வித் திட்டங்களைச் செயல்படுத்துபவர், மதநல்லிணக்கம் பேணுபவர், ஒடுக்கப்பட்டோர் உரிமைக்காக முழங்குபவர், கலை பண்பாட்டைக் காப்பவருமான தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களை வணங்குகிறேன். வாழையடி வாழையாக இயக்கத்தையும், இனத்தையும் வாழ வைப்பதற்கு முத்தமிழறிஞர் கலைஞரின் பதிப்பாய், திராவிட மாடல் ஆட்சி நாயகரின் கொள்கை தொகுப்பாய், இளைஞர்களின் வழிகாட்டியாய் விளங்கும், சகோதரர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அவர்களையும் வணங்குகிறேன்.

நம்முடைய மூத்த அமைச்சர்களையும், அமைச்சர் பெருமக்களையும், சட்டமன்ற உறுப்பினர்களையும், வருகை தந்திருக்கின்ற நம்முடைய அன்பிற்கினிய சகோதரர்கள், பார்வையாளர்கள், இங்கு இருக்கக்கூடிய அரசு அலுவலர்கள் அத்தனைபேரையும், பத்திரிக்கையாளர்கள் உள்ளிட்ட ஊடக நண்பர்களையும் இந்த நேரத்தில் நான் வணங்க கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோல, இந்தத் துறையை எனக்கு முன்னால் கடந்த இரண்டாண்டு காலமாக பராமரித்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கு சிறப்பு நன்றியையும் வணக்கத்தையும் இந்த நேரத்தில் நான் உரித்தாக்கிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

என்னுடைய வெற்றிக்கு வாக்களித்த காங்கேயம் தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும், வெற்றிக்காக பாடுபட்ட மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி இயக்கங்களின் செயல் வீரர்களுக்கும், கழக நிர்வாகிகளுக்கும், திருப்பூர் மாவட்ட மக்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். என்னுடைய தாயையும், தந்தையையும் இந்த நேரத்தில் வணங்குகிறேன்.

### கலைப்பண்பாட்டு மையங்கள்!

நூற்றாண்டு கண்ட கலைஞர். கலை உலகத்தின் தலைமகனாம், தலைவர் கலைஞர் அவர்களின் அன்பு புதல்வரின் திராவிட மாடல் அரசில் அங்கம் வகிக்கும் கலைஞர் அவர்கள் சாதனைகள் பல படைத்த, கலை பண்பாடு மற்றும் அருங்காட்சியகங்கள் துறையின் இந்தாண்டு மானியக் கோரிக்கையினை முதல் முறையாக தாக்கல் செய்வதில் நான் பெருமையடைகிறேன். கலை பண்பாட்டுத் துறை 3 ஆண்டுகாலமாக 33 அறிவிப்புகளைத் தந்து, 18 அறிவிப்புகளை நிறைவு செய்து, தொடர் நடவடிக்கைகளில் 15 அறிவிப்புகளை நிறைவு செய்வதற்கு பணிகள் நடைபெற்று வருகின்றன. கலை பண்பாட்டு இயக்கத்தின்கீழ் 7 மண்டலங்கள் கலைப் பண்பாட்டு மையங்களாக செயல்பட்டு வருகின்றன. அவை காஞ்சிபுரம், சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகியவைகள் ஆகும். அதேபோல, கலைப் பண்பாட்டு துறையோடு சேர்ந்த துறையாக இன்றைக்கு தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகம் இன்றைக்கு செயல்பட்டு வருகிறது.

அரசு கவின் கலைக் கல்லூரிகள் சென்னை மற்றும் கும்பகோணத்திலும், அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி மாமல்லபுரத்திலும், அரசு இசைக் கல்லூரிகள், சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருவையாறு ஆகிய நான்கு இடங்களிலும், அரசு நிதியுதவி பெறும் கல்லூரிகலைக் காவிரி நுண்கலைக் கல்லூரி, திருச்சியில் செயல்பட்டு வருகிறது.


தமிழ்நாட்டில் மாவட்ட அரசு இசைப் பள்ளிகள் 17 உள்ளன. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், சென்னையில் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம் தலைவர் முத்தமிழறிஞர் ஐயா கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது உருவாக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றங்கள் 60 இடங்களில் உயிர்ப்புடன் செயலாற்றி வருகின்றன.

### கலைப் பயிற்சிக்கான முகாம்கள்!

மேலும், கலை பண்பாட்டு இயக்ககம் வாயிலாக, சான்றிதழ் படிப்புகளைத் தொடங்கியிருத்தல், புதிய கட்டடங்கள் கட்டுதல், தளவாடங்கள் வாங்குதல், பாரம்பரியமிக்க கட்டடங்களைப் புனரமைத்தல், மாணவர்களுக்குப் பகுதி நேரப் பயிற்சியளித்தல், கோடைகாலப் பயிற்சி வழங்குதல், கலைப் பயிற்சிக்கான முகாம்களை முன்னெடுத்தல், கலைப் போட்டிகள் நடத்துதல் என தமிழரின் தன்னிகரில்லா கலைகளை வளர்க்கவும், பண்பாட்டினைத் தழைக்கச் செய்யவும் கலை பண்பாட்டுத் துறை நயத்துடன் நடைபோடுகின்றது.

கடந்த நிதியாண்டில் நிறைவேற்றப்பட்ட பணிகள்: தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த சங்கமம் "நம்ம ஊரு திருவிழா" என்ற பிரம்மாண்டமான நாட்டுப்புறக் கலை விழாவை நடத்திட சுமார் 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சென்னை, சேலம், கோவை, மதுரை ஆகிய நகரங்களில் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டிருக்கிறது. வருங்காலங்களில் காஞ்சிபுரம், வேலூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்களில் விரைவில் நடத்தப்படவிருக்கிறது.

தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகம் மற்றும் அதன் இணைவு பெற்ற கல்லூரிகளில் பயின்ற 3,444 மாணாக்கர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவினை துவங்கி வைத்து பட்டங்களை அளித்தார். தமிழ்நாடு அரசு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகத்திற்கு சென்னையில் ரூ.14 கோடியே 85 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள். மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி அரசு இசைப் பள்ளிக்கு



ரூ.1 கோடியே 10 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடம் திறந்து வைக்கப்பட்டது என்பதை இந்த நேரத்தில் நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தால் தேர்வு செய்யப்பட்ட 1,000 நலிந்த கலைஞர்களுக்கு திங்கள்தோறும் ரூ.3,000/நிதியுதவி வழங்கி வருகிறார்கள். கலை மாமணி விருது பெற்ற, தற்போது நலிந்த நிலையில் வாழும் 10 மூத்த கலைஞர்களுக்கு தலா ரூ.1.00 இலட்சத்திற்கான காசோலை வழங்கப்பட்டுள்ளது. 500 நாட்டுபுறக் கலைஞர்களுக்கு தலா ரூ.10,000/ வீதம் ரூ.50.00 இலட்சத்திற்கான இசைக் கருவிகள் மற்றும் ஆடை ஆபரணங்கள் வாங்குவதற்கான தொகையினை வழங்கியுள்ளார்கள்.

கடலூர் மாவட்ட அரசு இசைப் பள்ளியின் புதிய கட்டடம் ரூ.1 கோடியே 60 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டது. அதை, நாங்களும், எங்களுடைய வேண்டுகோளை ஏற்று வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களும் திறந்து வைத்தோம் என்பதை இந்த நேரத்தில் நினைவூட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாடு அரசு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழக திறந்தவெளி கலையரங்கம் ரூ.1 கோடியே 43 இலட்சம் மதிப்பில் சென்னையில் தற்போது புனரமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் அலுவலக கட்டடம் ரூ.1.54 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ளது. சென்னை மற்றும் திருவையாறு அரசு இசைக் கல்லூரிகளில் நாதஸ்வரம் மற்றும் தவில் ஆகிய துறைகளில் புதிய பட்டப்படிப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.

### கலைச்செம்மல் விருது பரிசுத் தொகை!

சென்னை அரசு அருங்காட்சியகத்தில் அமைக்கப்பட்ட மாநில அளவிலான கலைக் காட்சியினைத் திறந்து வைத்து, சிறந்த கலைஞர்களுக்கு பரிசுத்தொகையும், பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கியுள்ளோம். மரபு வழி, நவீன பாணி ஓவியம் மற்றும் சிற்பக் கலை கலைஞர்களின் திறனை அங்கீகரிக்கும் வகையில், "கலைச்செம்மல்" விருதுகளை கடந்த மூன்றாண்டு காலத்தில் 24 கலைஞர்களுக்கு வழங்கியுள்ளோம். இதுவரை, பாராம்பரியக் கலைகளில் 33 புகழ்பெற்ற கலைஞர்களுக்கும், நவீன பாணி கலைகளில் 64 புகழ்பெற்ற கலைஞர்களுக்கும் கலைச்செம்மல் விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் கலை வடிவங்களை அழியாமல் பாதுகாக்கவும், அவற்றை வளர்க்கவும் முதற்கட்டமாக 100 அரசு கல்லூரிகளில் மாணாக்கர்களுக்கு கலைப் பயிற்சிகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. புதிதாக உருவாக்கப்பட்டுள்ள 8 புதிய மாவட்டங்கள் மற்றும் ஊரக பகுதிகளில் 20 கூடுதல் ஜவஹர் சிறுவர் மன்றங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

## 1000 நலிந்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் ரூ.3,000 நிதியுதவி!

தொடர் நடவடிக்கையில் உள்ள பணிகள்: தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் உள்ள திரையரங்கத்தை புதுப்பிக்க ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பழம்பெரும் கலைஞர்களின் வாழ்கை வரலாறு மற்றும் கலைப் படைப்புகளை டிஜிட்டல் முறையில் ஆவணப்படுத்தி பாதுகாக்க ரூ.20.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டது. நாட்டுப்புறக் கலைகளைப் பாதுகாக்கவும், இக்கலைகள் வருங்காலத்தில் செழித்து வளரும் வகையில் தமிழ்நாட்டில் 25 பகுதிநேர நாட்டுப்புறக் கலைப் பயிற்சி மையங்களை நடத்துவதற்கு ரூ.2 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் கலை வடிவங்களை அழியாமல் பாதுகாக்கவும், அவற்றை வளர்க்கவும் 100 அரசுக் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு வாரத்திற்கு இரண்டு நாட்கள் கலைப் பயிற்சி வகுப்புகள் நடத்திட ரூ.85.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. சென்னை அரசு கவின் கலைக் கல்லூரியில் அனைத்து வசதிகளுடன்கூடிய மூன்று புதிய வகுப்பறைகள் மற்றும் நூலகக் கட்டடம் ரூ.23 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ளது.

கும்பகோணம், அரசு கவின் கலைக் கல்லூரியில் அனைத்துத் துறைகளுக்கும் வகுப்பறைகள், கணினிக்கூடம், கலையரங்கம், விடுதி, தளவாடப் பொருட்கள் மற்றும் தீயணைப்பு வசதிகளுக்காக ரூ.15.26 கோடி மதிப்பில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### மாவட்ட கலை விருதுகள்!

தமிழ்நாடு அரசு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகத்தின் நல்கைத்தொகை ரூபாய் 2 கோடியிலிருந்து ரூபாய் 3 கோடியாக உயர்த்தி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இப்பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி மையம், நூலகம் மற்றும் கற்றல் மேலாண்மை அமைப்பு முறை அமைத்திட ரூ.1.00 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கான இந்திய நாடகக் கலையின் திட்டத்தினை இப்பல்கலைக்கழகத்தில் செயல்படுத்திட ரூ.2 கோடியே 67 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சென்னை, மயிலாப்பூரில் தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு ரூபாய் 2 கோடியே 41 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூர், தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் ரூபாய் 1 கோடியே 97 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறைகள் கட்டடம் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. கலைத் துறையில் சிறந்து விளங்கும் கலைஞர்களுக்கு பின்வரும் ஒவ்வொரு பிரிவிற்கு தலா 3 விருதுகள் வீதம் 15 கலைஞர்களுக்கு "மாவட்டக் கலை விருதுகள்" மாவட்ட வாரியாக வழங்கப்படுகின்றன. 18 வயது வரைகலை இளமணி, 19 முதல் 35 வயது வரைகலை வளர்மணி, 36 முதல் 50 வயது வரை கலைச் சுடர்மணி. 51 முதல் 65 வயது வரை கலை நன்மணி. 65 வயதிற்கு மேல் கலை முதுமணி என்கிற தலைப்புகளில் விருதுகள் வழங்கப்படுகின்றன. சிறப்பாக அவை வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்தாண்டில் 22 மாவட்டங்களில் 660 கலைஞர்களுக்கு மாவட்ட கலை விருதுக்கான பாராட்டுச் சான்றிதழ்களும், விருதுத்தொகையும் வழங்கப்பட்டன. கலைஞர்கள், அரசின் நிதியுதவி பெறுவதற்கும், சலுகைகளைப் பயன்படுத்திக் கொள்ளவும், நிதியுதவிப் பெறுவதற்காகவும், இது வரை மாவட்டங்களில் 82 ஆயிரத்து 748 கலைஞர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டினை சிறப்பாகக் கொண்டாடும் வகையில் மண்டலக் கலை பண்பாட்டு மையங்களின் வாயிலாக மாவட்டங்கள் தோறும் கலை நிகழ்ச்சிகளும், கண்காட்சிகளும், இசை விழாக்களும் நடத்தப்பட்டன. சென்னையில் நடைபெற்ற ஜி20 மாநாட்டு நிகழ்வு, மாமல்லபுரத்தில் நடைபெற்ற ஜி20 மகளிர் உச்சி மாநாட்டு நிகழ்வு, 2024 ஆம் ஆண்டு உலக முதலீட்டாளர்கள் உச்சி மாநாட்டு நிகழ்வு, சென்னை, வர்த்தக மையத்தில் நடைபெற்ற அயலகத் தமிழர் திருநாள், சென்னை, மருத்துவ சுற்றுலா உச்சி மாநாட்டில் நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகள் பல்வேறு கலைஞர்களால் நடத்தப்பட்டன.

### தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம்!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம் 2007 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்நாடு அரசு 99 நாட்டுப்புறக் கலை வடிவங்களை அடையாளம் கண்டு பட்டியலிட்டு உள்ளது. இதுவரை 55,519 நாட்டுப்புறக் கலைஞர்கள் வாரிய உறுப்பினர்களாக பதிவு செய்துள்ளனர். ரூபாய் 2 கோடியே 9 இலட்சத்து 11 ஆயிரம் நிதி ஒதுக்கீட்டில் 9,157 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்திற்கு ஆண்டு நல்கைத் தொகை (Grant) ரூ.35.00 இலட்சத்திலிருந்து ரூ.90.00 இலட்சம் ஆக உயர்த்தி வழங்கப்பட்டது.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம். தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் என்ற அமைப்பானது தமிழ்நாட்டின் பாரம்பரியக் கலைகளை ஊக்குவிக்க 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் தோற்றுவிக்கப்பட்டு, 1973 ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த போது, "தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

## கலைமாமணி விருதுபெற்ற கலைஞர்கள் அரசுப் பேருந்துகளில் கட்டணமின்றிப் பயணம்!

### 1924 கலைஞர்களுக்கு கலைமாமணி விருது!

மாநிலங்களுக்கிடையே கலைக் குழுக்கள் பரிமாற்றம் செய்தல். அகில இந்திய அளவில் கீழ்க்கண்ட மூன்று விருதுகள் வழங்கும் திட்டத்தின்கீழ், இலக்கியத்திற்கான "பாரதி" விருது, இசைக்கான "எம்.எஸ்.சுப்புலட்சுமி" விருது, நடனத்திற்கான "பாலசரஸ்வதி விருது", அரிய கலை நூல்களை பதிப்பித்திட்ட நல்கி வழங்குதல். அரிய கலை வடிவங்களை ஆவணப்படுத்துதல், கலைஞர்களின் கலைச் சேவைக்காக மாநில அளவில் கலைமாமணி விருது வழங்கும் திட்டத்தின்கீழ் கலைத் துறையில் சிறந்து விளங்கும் கலைஞர்களுக்கு 'கலைமாமணி விருது", தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 1924 கலைஞர்களுக்கு கலைமாமணி விருது வழங்கப்பட்டு உள்ளன. (5 சவரன் தங்கப் பதக்கமும், பாராட்டுச் சான்றிதழும் அதில் வழங்கப்படுகிறது) நலிந்த நிலையில் வாழும் மூத்த கலைமாமணி விருதாளர்களுக்கு தலா ரூ.1,00,000/ மதிப்பில் பொற்கிழி வழங்கப்படுகிறது. மறைந்த கலைஞர்களின் குடும்பங்களுக்கு ஒரு முறை ரூ.25,000/ குடும்ப பராமரிப்பு நிதியுதவி வழங்குதல்; நலிந்த நிலையில் வாழும் மூத்த கலைஞர்களுக்கு திங்கள்தோறும் ரூ.3.000/ நிதியுதவி வழங்கப்படுகிறது. புதிய நாடகங்கள் மற்றும் நாட்டிய நாடகங்கள் தயாரிக்க நல்கை (Grant) வழங்குதல் கூடுதலாக்கப்பட்டிருக்கிறது. நாட்டுப்புறக் கலைஞர்கள் மற்றும் கலைக் குழுக்களுக்கு இசைக்கருவிகள் மற்றும் ஆடை அணிகலன்கள் வாங்குவதற்கு நல்கை (Grant) கூடுதலாக வழங்கப்பட்டிருக்கிறது. நாடக கலைஞர்கள் மற்றும் கலைக் குழுக்கள், வெளியூர்களில் கலை நிகழ்ச்சிகள் நடத்த தொடர்வண்டி மற்றும் அரசுப் பேருந்துகளில் பயணிக்க பயணக் கட்டண சலுகை வழங்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. நேரத்தின் அருமை கருதி, அடுத்து அருங்காட்சியகங்கள் துறைக்கு வருகிறேன்.

### அருங்காட்சியகங்கள் துறை!

அருங்காட்சியகங்கள் துறையைப் பொறுத்த வரையில், மூன்றாண்டு காலமாக 23 அறிவிப்புகள் அறிவிக்கப்பட்டு, 13 அறிவிப்புகள் நிறைவேற்றப்பட்டுள்ளது. பாக்கி 10 அறிவிப்புகள் தொடர் நடவடிக்கையில் இருக்கின்றன. கலைகள் சிறந்த தமிழ்நாடு! அதன் புகழையும், வரலாற்றையும், தொன்மையையும் அறிந்து தெளிய அருங்காட்சியகங்கள் முன்னைப் பழமைக்கும் பழமையாய், பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் விளங்குகின்றன. காலந்தோறும் வளரும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி இன்றைய தலைமுறைக்கும், இனி வரும் தலைமுறைக்கும் நம் அருமையை அறுதியிட்டுச் சொல்வன அருங்காட்சியகங்கள். பழம்பெருமைக்குச் சான்று பகரும் அரிய பொருள்களைத் திரட்டி அழகாய் காட்சிப்படுத்தி, அதன் சிறப்பினை எடுத்துரைக்க வல்ல அருங்காட்சியகங்கள் சீரிய முறையில் சிறப்பாய் செயல்பட்டு வருகின்றன.

**"ஊன் கலந்து உயிர் கலந்து தேன் கலந்து**
**பலாச்சுளை போல் தித்திக்கும் தமிழ்"**

என்பார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

அத்தமிழ் கோலோச்சும் தமிழ்நாட்டின் பெருமையைத் தரணியில் மென்மேலும் உயர்த்த அயராது, ஓய்வில்லாது செயலாற்றும் நம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலைக்கும், கலைஞர்களுக்கும் மேன்மை அளிக்கும் வகையிலும், அருங்காட்சியகங்களின் வளர்ச்சிக்கு வளம் சேர்க்கும் வகையிலும், எண்ணற்ற திட்டங்களை வகுத்தளித்துச் செயல்படுத்தி வருகின்றார். அதற்கு எனது நெஞ்சம் நிறைந்த நன்றியை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். அருங்காட்சியகங்கள் சென்னையில், எழும்பூரில் இருக்கின்றது. இந்தியாவிலே இரண்டாவது பழமையான அருங்காட்சியகமாக திகழ்கிறது. இது 1851 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. அதுபோக ஏறத்தாழ 23 இடங்களிலே மாவட்ட அருங்காட்சியகங்கள் இருக்கின்றன. காலத்தின் அருமை கருதி அவற்றின் பெயர்களை படிக்கவில்லை.

அதைப்போல, சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தில் மகாத்மா காந்தியடிகள் அவர்களின் திருவுருவச் சிலையை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சமீபத்திலே திறந்து வைத்தார்கள். மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் பல வகைப்பட்ட புதைபொருட்களை பெற்று வருகிறது. இத்தகைய அரும் பொருட்களை நூற்றாண்டுக்கும் மேலாக தொடர்ந்து சேகரித்து, சென்னை அரசு அருங்காட்சியகம் மற்றும் பிற மாவட்ட அரசு அருங்காட்சியகங்களில் பாதுகாக்கப்பட்டும், காட்சிப்படுத்தப்பட்டும் வருகின்றன.

சென்னை அரசு அருங்காட்சியகத்தில் கலையரங்கத்தை சீரமைத்து மேம்படுத்த முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு, ரூபாய் 3 கோடியே 40 இலட்சம் மதிப்பீட்டில் நிதி ஒதுக்கப்பட்டு, அனைத்துப் பணிகளும் நிறைவுற்று இன்றைக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தில் உள்ள பழமையான கட்டடத்தை சீரமைக்க, பாரம்பாரிய உணவகம் அமைக்க ரூபாய் 2 கோடியே 81 இலட்சம் மதிப்பீட்டில் நிதி ஒதுக்கப்பட்டு, திறந்த வைக்கப்பட்டுள்ளது. அதைப்போல தேசிய கலையரங்கம் சுமார் 12 கோடி ரூபாய் செலவிலே புதுப்பிக்க ப்பட்டுள்ளது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு முத்தமிழறிஞர் கலைஞர் பெற்ற நினைவுப்பரிசுகள் மற்றும் கலைஞர் அவர்களால் ஒழிக்கப்பட்ட மனிதனை மனிதனே இழுக்கும் கைரிக்சா என்ற கண்காட்சியும், புகைப்படக் கண்காட்சி மற்றும் ஓவியக் கண்காட்சியும் நடத்தப்பட்டது. அருங்காட்சியகங்களின் பொது மக்களின் பார்வை நேரம் காலை

9 . 30 மணியிலிருந்து மாலை 5-00 மணி வரை செயல்பட்டு வருகிறது. அந்த நேரத்தை காலை 9.30 மணி என்பதற்கு பதிலாக காலை 10. 30 மணியிலிருந்து இரவு 700 மணி வரை என்று விரைவில் கால மாற்றம்

தொடர்ச்சி 5-ஆம் பக்கம்